தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்க ரூ.40 லட்சம் ஒதுக்கீடு

திருப்பூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு மானிய விலையில் உலர் வைக்கோல் வழங்க தமிழக அரசு ரூ.40 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி: தமிழகத்தில் இரு பருவமழையும் பெரும்பாலான மாவட்டங்களில் பொய்த்துப்போனதால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விவசாயத்திற்கு தண்ணீர் இல்லாத நிலை உருவாகி உள்ளது. மேய்ச்சலுக்குப் புல் இல்லாததாலும், சோளம், மக்காச்சோளம் விளையாததாலும் கால்நடைத் தீவன உற்பத்தியும் குறைந்து, தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கால்நடைத் தீவனத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறை சமர்ப்பித்த கோரிக்கையை ஏற்று, கால்நடைகளுக்கு உலர் வைக்கோல் தீவனத்தை மானிய விலையில் வழங்க தமிழக அரசு ரூ.12.50 கோடியை முதல்கட்டமாக ஒதுக்கீடு செய்துள்ளது. இதில், திருப்பூர் மாவட்டத்திற்கு ரூ.40 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு கிலோ வைக்கோல் ரூ.2-க்கு மானிய விலையில், ஒரு மாட்டிற்கு ஒருநாளைக்கு 3 கிலோ வீதம் வழங்கப்படும். அதிகபட்சமாக 5 மாடுகளுக்கு வாராந்திர தேவை அடிப்படையில் வாரம் ஒருமுறை தொடர்ச்சியாக 2 அல்லது 3 மாதங்களுக்கு இத் தீவனம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. செங்கப்பள்ளி, காங்கயம், மூலனூர், வாளவாடி ஆகிய இடங்களில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனைகளில் தீவனக் கிடங்குகள் அமைக்கப்படும்.

கால்நடை வளர்ப்போர், தங்களது குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு 2 புகைப்படங்கள், கால்நடைகளின் எண்ணிக்கை குறித்த விவரங்களை அருகில் உள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் கொடுத்துப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்த அட்டை வைத்திருப்போருக்கு மட்டுமே இத் திட்டத்தில் மானிய விலையில் தீவனம் வழங்கப்படும்.

## விவசாயிகளுக்கு வறட்சி இழப்பீடாக ரூ.76 கோடி! மாவட்ட ஆட்சியர் கோவிந்தராஜ்

தமிழகத்தில் வேறெந்த மாவட்டத்திலும் இல்லாத அளவில், திருப்பூர் மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ரூ.76 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது என்று, விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தெரிவித்தார். திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில், பங்கேற்ற விவசாயிகளில் பெரும்பாலானோர் வெளிநடப்புச் செய்தனர். இந் நிலையில், வெளிநடப்பில் பங்கேற்காத விவசாயிகள், அரசுத் துறை அலுவலர்களுடன் இக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இதில், விவசாயிகள் கோரிக்கை தொடர்பாக பல்வேறு துறைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

பின்னர், ஆட்சியர் கோவிந்தராஜ் பேசியது: திருப்பூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்காக எண்ணற்ற பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரசு அறிவித்துச் செயல்படுத்தியுள்ள அனைத்து திட்டங்களும் விவசாயிகளுக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட இம் மாவட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வறட்சி நிவாரணமாக ரூ.76 கோடி முதல்வர் ஒதுக்கினார். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. வேறெந்த மாவட்டத்திற்கும் இல்லாத அளவில், திருப்பூர் மாவட்டத்திற்குத் தான் வறட்சி நிவாரணமாக ரூ.76 கோடி தரப்பட்டுள்ளது. கடந்த முறை பி.ஏ.பி. பாசன வாய்க்காலில் கடைமடை இறுதிவரை தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இதனை அனைத்து விவசாயிகளும் பாராட்டியுள்ளனர் என்றார். இதில், கால்நடைகளுக்கு மானிய விலையில் உலர் வைக்கோல் தீவனம் வழங்கும் திட்டத்தில் பயன்பெற கால்நடை வளர்ப்போருக்கு அடையாள அட்டைகளை வழங்கி, இத் திட்டதை ஆட்சியர் துவக்கி வைத்தார். குன்னத்தூர், செங்கப்பள்ளி, வெள்ளிரவெளி, எஸ்.பெரியபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 27 விவசாயிகள் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டனர்.

**"பயிர்க் கடன்களை வங்கிகள் முழுமையாக வழங்க வேண்டும்'**

பயிர்க் கடன், இதர விவசாயக் கடனுதவிகளை வங்கிகள் முழுமையாக வழங்க வேண்டும் என்று, ஆட்சியர் கு.கோவிந்தராஜ் அறிவுறுத்தினார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வங்கியாளர்களின் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. மாவட்ட முன்னோடி வங்கி (கனரா வங்கி) மேலாளர் வ.கணேசன் வரவேற்றார்.

இதில், ஆட்சியர் கு.கோவிந்தராஜ் பேசியது:

தாட்கோ மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கான மானியக் கடன் திட்டங்களில் வங்கிகளின் பங்கு மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். நீட்ஸ் (சஉஉஈந) எனப்படும் புது தொழில்முனைவோர் திட்டத்தில் 2013-14ஆம் நிதியாண்டிற்கு 34 தொழில்முனைவோர்களுக்கு ரூ.3.40 கோடி மானியம் வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கை காட்டிலும், 42 தொழில்முனைவோர்களுக்கு ரூ.5.99 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், இதரத் திட்டங்களில் வங்கிகளின் பங்கு இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும். நிலுவையிலுள்ள கடன் விண்ணப்பங்கள் அனைத்தும் பிப்ரவரி 15-க்குள் பரிசீலனை செய்யப்பட்டு கடனுதவி வழங்க வேண்டும். அனைத்து வங்கிகளும் நிதி சார் கல்வி முகாம்களை நடத்தி மக்கள் மத்தியில் வங்கி நடைமுறைகளைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க் கடன், இதர விவசாயக் கடனுதவிகளை முழுமையாக வழங்க வேண்டும்.

மாநகர காவல் துறை ஆணையரின் வேண்டுகோளின்படி சீரணி படை வீரர்களை வங்கிகளின் ஏ.டி.எம். மையங்களில் காவலாளிகளாக நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஏ.டி.எம்.களில் காவல் துறை புகார் பெட்டிகளை அமைக்க வங்கிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

மாநில ஊரக வாழ்வாதார திட்ட ஆலோசகர் கே.எம்.திருநாவுக்கரசு பேசியது:

திருப்பூர் மாவட்டத்தில் சுயஉதவிக் குழுக்களுக்கு நடைமுறை மூலதனக் கடன் திட்டம் மற்றும் பொருளாதாரக் கடன் திட்ட இலக்கு ரூ.102 கோடி. ஆனால், இதுவரை ரூ.49 கோடி மட்டும் வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

ரிசர்வ் வங்கி (சென்னை) உதவிப் பொது மேலாளர் ஆர்.எல்.ராஜாராமன் பேசியது:

வங்கிகளின் சேவைகளைத் துரிதப்படுத்த வசதியளிப்பவர் பணியிடத்திற்கு இதுவரை பணியாளர்கள் அமர்த்தப்படாத கிராமங்களில் உடனடியாக நியமிக்க வங்கிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் ப.திரவியம், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) எஸ்.மூர்த்தி, நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் வி.எஸ். ஸ்ரீராம், மாவட்ட முன்னோடி வங்கி (கனரா வங்கி) முன்னாள் மேலாளர் ஆர்.ராஜகோபால், அனைத்து வங்கியாளர்கள், அரசுத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.74 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 42.74 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 127 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,400 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.92 டி.எம்.சி. ஆகும்.

**பெணுகொண்டாபுரம் ஏரியில் தண்ணீர் திறப்பு**

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் அருகே உள்ள பெணுகொண்டாபுரம் ஏரியில் இருந்து பாசனத்துக்காக திங்கள்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

பாரூர் ஏரியிலிருந்து நீர்வரத்து பெறும் போது, பெணுகொண்டாபுரம் ஏரியிலிருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்படும்.

ஏரியில் மொத்த கொள்ளளவான 18 அடியில் தற்போது 14 அடி தண்ணீர் உள்ளது.

இதையடுத்து, திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மனோரஞ்சிதம் நாகராஜ் எம்எல்ஏ ஏரியிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட்டார். இதன்மூலம் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

நிகழ்ச்சியில் மத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் முருகம்மாள் ஸ்ரீராமுலு, தருமபுரி மாவட்ட பால் வள ஒன்றியத் தலைவர் தென்னரசு, பொதுப் பணித் துறை இளநிலைப் பொறியாளர் நாகராஜ், பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் செளந்தர்ராஜன், ஒட்டப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் அலமேலு சுப்பிரமணி, ஸ்ரீராமுலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளுக்கு செயல்விளக்க பயிற்சி

அரியலூர் மாவட்டம், ஜயங்கொண்டம் வேளாண் பொறியியல் துறை சார்பில் அமிர்தராயன்கோட்டை கிராமத்தில் வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரத்தின் செயல்விளக்க பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

பயிற்சியில் ஜயங்கொண்டம் வேளாண் பொறியியல் துறை அலுவலக இளநிலை பொறியாளர் கலைமணி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

வேளாண் பணிகளை மேற்கொள்ள ஆட்கள் பற்றாக்குறை நிலவுவதால், விவசாயிகள் தங்கள் வயலில் உள்ள வைக்கோலை குறித்த நேரத்தில் சேகரிக்க முடியாமல், மழைக் காலங்களில் அவை அழுகி வீணாகின்றன.இதனால், வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் வைக்கோலை குறைந்த நேரத்திலும், குறைந்த செலவிலும் கட்டி முடிக்க முடியும் என்றார். செயல்விளக்கத்தில் சுற்றிப்புற கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

### உதவித்தொகை: மீனவர்களிடம் விண்ணப்பங்கள் வரவேற்பு

மீன்பிடி குறைவு காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகைகளை பெற விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஒவ்வொரு ஆண்டும் கடலில் மீன் பிடி குறைவு காலத்தின்போது வருவாய் இல்லாமல் வறுமையில் வாடும் மீனவக் குடும்பங்களுக்காக சிறப்பு நிவாரணத்தொகையாக ரூ.4 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோல, தமிழகத்தின் கிழக்கு மற்றும் மேற்கு கடல் பகுதிகளில் மீன்களின் இனப்பெருக்க காலத்தை கருத்தில் கொண்டு 45

நாள்களுக்கு விசைப்படகுகள், இழுவலை படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை விதிக்கப்படும். எனவே, இந்த தடைக் காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.2 ஆயிரம் வழங்கப்படுகிறது.

எனவே, இந்த இரு திட்டங்களிலும் பயன்பெறத் தகுதியான திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடற்கரை கிராமங்களைச் சேர்ந்த மீனவ குடும்பத்தினர் விண்ணப்பிக்கலாம். ராதாபுரத்தில் உள்ள மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பிப்ரவரி 1ஆம் தேதி முதல் விண்ணப்பங்கள் பெறப்படும். இத் திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்கள் பெற 04637-254183 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

**ஹாங்காங்கில் பறவை காய்சல் அறிகுறி: பெரும் அளவில் கோழிகள் அழிப்பு**

ஹாங்காங்கில் பறவை காய்சலின் அறிகுறி இருப்பது கண்டுபிடிகப்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு அதிக எண்ணிக்கையில் கோழிகள் அழிக்கப்படுகின்றன.

இந்நிலையில்  அடுத்த மூன்று வாரங்களுக்கு , சீனாவில் கோழி இறக்குமதி தற்காலிகமாக நிறுத்தப்படும் என்றும் மேலும், இருபதாயிரம் கோழிகள் வரை அழிக்கப்படும். என்றும் தெரிவிகப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக இது போன்று பறவை காய்ச்சல் பாதிப்பால் கோழிகள் பெரும் அளவில் அழிக்கப்பட்டன.

எனினும் இந்த சீன புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு முன்னதாக வருகிறது என்பதும் சீனப் புத்தாண்டு கொண்டாட்டத்தில் கோழிகள் தான் பெரும்பாலும் உணவாக உண்ணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

மூலிகை சாகுபடியில் மானியம்

இந்தியாவில் மூலிகையின் தேவை அதிகரிக்கும் அளவு மூலிகை உற்பத்தியானது இல்லை. 90% மேல் கம்பெனிகளின் தேவையானது இயற்கையாக காணப்படும் மூலிகைகளை சேகரித்து அனுப்புவதன் மூலம் நிவர்த்தி செய்யப்படுகிறது. எனவே மூலிகை பயிரிடுதல் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. ஆகையால் மூலிகைப் பாதுகாப்பு மற்றும் அதன் தேவைகளைக் கருத்தில் கொண்டு தேசிய மூலிகைப் பயிர் வாரியமானது 57 தாவரங்களைப் பயிரிடுவதற்கு மானியம் வழங்கி ஊக்குவிக்கிறது.

இவ்வாரியமானது அழிந்து வரும் அரிதான மூலிகைகளை பயிரிடுவதற்கு 75%ம், உற்பத்தி குறைந்து வரும் நீண்ட காலப் பயிர்களுக்கு 50% மும் மற்ற மூலிகைகளுக்கு 20%ம் மானியம் வழங்குகிறது. மானியத்தை தனி விவசாயியாக அல்லாமல் குழுவாக செயல்பட்டால் பெறுதல் எளிதாகும்.

தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலையில் நன்கு வளரும் மூலிகைகள் மற்றும் அதனை 1 எக்டேரில் சாகுபடி செய்ய மூலிகைப் பயிர் வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மானியத்தைக் காண்போம்.

வசம்பு- 20%, சோற்றுக்கற்றாழை-20%, பேரரத்தை - 20%, சித்தரத்தை -20%, தண்ணீர்விட்டான் கிழங்கு - 20%, வேம்பு - 20%, நீர் பிரம்மி - 20%, சாரணத்தி - 20%, சென்னாரை -20%, சங்குபுஸ்பம் -20%, மாகாளி - 20%, வாவிலங்கம் -20%, நெல்லி -20%, சிறுகுறிஞ்சான் - 20%, நன்னாரி -20%, கச்சோலம் -20%, பூனைக்காலி -20%, துளசி-20%, கீழாநெல்லி -20%, திப்பிலி -20%, செங்கொடிவேலி-20%, குறுந்தொட்டி-20%, மணத்தக்காளி-20%, சீனித்துளசி-20%, நீர்மருது-20%, தான்றி-20%, கடுக்காய்-20%, சீந்தில் -20%, நொச்சி-20%, வெட்டிவேர்-20%, அமுக்கிரா-20%, வில்வம்-50%, வாகை-50%, மாவிலங்கம்-50%,


கண்வலிக்கிழங்கு- 50%, பாலா-50%, கொடிவேலி -50%, வேங்கை-50%, நஞ்சறுப்பான்-50%, சந்தன வேங்கை - 75%, சந்தனம் - 75%

***குறிப்பு:*** விவசாயிகள் மேற்கண்ட மூலிகைககளை பயிரிடுவதற்கு தேர்ந்தெடுக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.

1. சந்தைப்படுத்த வாய்ப்புள்ள மூலிகைககளை மட்டுமே தேர்வு செய்ய வேண்டும். மானியத்தைக் கருத்தில் கொண்டு சாகுபடி செய்யக்கூடாது.சிறந்த மூலிகைக் கம்பெனிகளுடன் ஒப்பந்த சாகுபடியை மேற்கொள்வது நல்லது.
2. இடவசதி மற்றும் நீர் வசதியைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
3. தரமான விதைகளை தேர்வு செய்வது மிகவும் முக்கியம்.
4. சாகுபடி முறை, அறுவடை முறை, பதப்படுத்தும் முறை மற்றும் செலவினங்களை மூலிகைகளை தேர்வு செய்யும் முன் அறிந்து கொள்வது அவசியமாகும். மானியம் பற்றிய விபரங்களை அருகில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**ந.கணபதிசாமி,**
**மதுரை- 625 706.**
**88700 12396**

## சின்ன சின்ன செய்திகள்



**மிளகு பராமரிப்பு:** இளம் செடிகளை தாங்கி, மரத்தின் மீது கட்டி ஏற்றி விட வேண்டும். வாடல்நோய் காணப்படும் தோட்டங்களில் பயிர் சுகாதாரத்தை கடைப்பிடிக்க வேண்டும். இதுவரை தோட்டத்தில் மூடாக்கு இடாவிட்டால் உடனே உலர்ந்த இலை தழை மற்றும் களைச் செடிகளைக் கொண்டு செடியில் தூர்ப்பகுதியில் மூடாக்கு இட வேண்டும். இதனால் மண்ணில் ஈரப்பதத்தைப் பாதுகாக்க முடியும்.

சிற்றிலை மற்றும் பில்லோடி ஆகிய நச்சுயிரி நோய்கள் தாக்கிய செடிகளை அகற்றி

அழித்து விட வேண்டும். மெதுவாடல்நோய் அறிகுறி தென்பட்டால் கொடிக்கு ஒரு கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும்.

*அறுவடை:* அறுவடையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். மிளகு கொத்தில் ஒன்று அல்லது இரண்டு மிளகு மணிகள் பச்சை நிறத்திலிருந்து ஆரஞ்சு அல்லது சிவப்பு நிறத்திற்கு மாறுவது தான் மிளகு முதிர்ச்சியடைந்ததற்கு அறிகுறியாகும். மிளகு கொத்திலிருந்து மிளகு மணிகளை சுகாதாரமான முறையில் கையால் அல்லது மிளகு பிரித்தெடுக்கும் இயந்திரம் மூலம் பிரித்தெடுக்க வேண்டும். மூங்கில், பாய், கான்கிரீட் உலர்களம், பாலிதீன், தார்ப்பாய் போன்ற சுத்தமான மற்றும் சுகாதாரமான பரப்புகளின் மீது மிளகினை உலர்த்த வேண்டும். இதனால் மிளகின் தரத்தினை மேம்படுத்த முடியும்.

**வெனிலா பராமரிப்பு:** காலநிலையைப் பொறுத்து தேவைக்கேற்ப கொடி களுக்கு நீர்பாய்ச்சுவதை தொடர வேண்டும். கொடியின் தூர்பாகத்தில் போதுமான அளவில் மூடாக்கு இட வேண்டும். இதனால் வேர்கள் நன்றாக பரவ ஏதுவாகிறது. வளர்ந்து வரும் வெனிலா கொடியைத் தாங்கு மரத்தில் ஏற்றி விட வேண்டும். பூக்கள் இன்னமும் தோன்றும். தோட்டங்களில் பூக்கள் மலர்ந்த அன்றே காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை மகரந்த சேர்க்கை செய்ய வேண்டும். நத்தை மற்றும் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும். வெனிலாத் தோட்டங்களில் கோழிகள் வருவதைத் தடுக்க வேண்டும். தண்டு நுனி அழுகல் அல்லது பூங்கொத்து அழுகல் நோய் காணப்பட்டால் செடியின் மீது 0.2 சத கார்பன்டாசிம் (100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் என்ற அளவில்) தெளிப்பதால் நோய் பரவுவதைத் தடுக்கலாம்.

நச்சுயிரி நோய் தாக்குதலின் அறிகுறி தென்பட்டதும் அந்தக் கொடியை உடனடியாக அகற்றி அழித்துவிட வேண்டும்.

***அறுவடை:*** காய்கள் அறுவடையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் காய்களின் நுனிப்பகுதியில் வெளிரிய மஞ்சள் நிறம் காணப்படுவது காய்கள் முதிர்ச்சி அடைந்ததற்கு அறிகுறியாகும். அத்தகைய காய்களை உடனடியாக அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்த வெனிலா காய்களை பார்பன் முறையில் பதப்படுத்தலாம்.

அல்லது அறுவடை செய்தவுடன் பச்சைக் காய்களாக விற்பனை செய்யலாம். *த.வே.ப.க. கோவைக்காய் கோ.1 :* எக்டருக்கு 83.09 டன் அதிக விளைச்சலைத் தரவல்ல பல்லாண்டு பயிராகும். நீளமான பச்சை, வெள்ளை நிறக்கோடுகளுடன் கொண்ட குறைவான விதைகளைக் கொண்டது. இனிப்புத்தன்மை கொண்ட காய்களைப் பச்சையாகவும், சமைத்தும் சாப்பிடலாம். பருவம்- ஜூன்- ஜூலை பயிரிட ஏற்ற காலமாகும். பயிரிட உகந்த மாவட்டங்கள் கோவை, தேனி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், திண்டுக்கல்.

**சின்ன வெங்காயத்தில் விதை உற்பத்தி: கோயம்புத்தூர் த.வே.ப.கழக** காய்கறித் துறையின் தலைவர் முனைவர் சரஸ்வதி விவரிக்கிறார். கோ.ஆன்.5 என்ற ரகம் விவசாயிகள் மத்தியில் பிரபலமாக உள்ளது. இந்த ரகத்தில் விதை உற்பத்தி செய்ய முடியும் என்பது கூடுதல் சிறப்பு. ஆராய்ச்சி முடிவின்படி அக்டோபர் - நவம்பர் மாதங்களில் விதைக்கப்படும் சின்ன வெங்காயத்தில் இருந்து மட்டுமே பூக்கள் வந்து விதை உருவாகின்றது. குறிப்பாக கோயம்புத்தூர் சுற்று வட்டாரங்களில் நிலவும் தட்பவெப்ப நிலையில் மட்டுமே பூக்கள் பூத்து விதைகள் உருவாகின்றன. விதை வெங்காயத்தை நாற்றங்கால் விட்டு அதில் 40 நாட்கள் வளர்த்து நடவு செய்ய வேண்டும். இப்படி செய்யும் போது 80 நாட்களில் அறுவடைக்கு வந்து விடும். இந்த முறையில் ஏக்கருக்கு 1 கிலோ விதை போதுமானது. ஆனால் நேரடியாக வெங்காயத்தை விதைக்கும் போது ஏக்கருக்கு 1 டன் வரை விதை தேவைப்படும். ஏக்கருக்கு சுமார் 40 ஆயிரம் ரூபாய் வரை விதைப்புக்காய்களாகவே செலவு பிடிக்கும்.

ஆனால் விதை வெங்காயத்தின் விலை ஒரு கிலோ ரூ. 4,300 மட்டுமே ஆகும். காய்கறித்துறையில் சின்ன வெங்காயம் விதை விற்பனை செய்கிறார்கள். முன்பதிவு செய்து கொண்டால் விதை உற்பத்தி செய்து வழங்குகிறார்கள். தொடர்புக்கு தொலைபேசி- 0422 - 661 1283

**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## நெல்லில் பாக்டீரிய இலைக்கருகல் நோய்

தற்போது நிலவி வரும் தட்பவெப்பநிலையால் நெற்பயிரில், பாக்டீரிய இலைக்கருகல் நோய் பரவலாக காணப்படுகிறது.

நோயின் ஆரம்பநிலையில், லேசான பச்சை நிறத்தில் நீர்க்கசிவுள்ள அல்லது மஞ்சள் நிறப்புள்ளிகள், இலையின் நுனி மற்றும் விளிம்புகளில் தோன்றுவதால், இலைகள் காய்ந்து விடுகின்றன. நோய் தீவிரமானால், புள்ளிகள் ஒன்றிணைந்து பெரிய வடுக்கள் அல்லது கருகிய திட்டுக்களை, இலைப்பரப்பில் உண்டாக்குகிறது.

தூர் கட்டும் மற்றும் கதிர் பிடிக்கும் பருவங்களுக்கு இடையில் நோய் உண்டாகும். நோய் தாக்கினால், இலைகள் மஞ்சள் நிறமாகி பின்னர் கருகியது போலாகும். நோய் முற்றிய நிலையில், அனைத்து இலைகளும் தாக்கப்பட்டு, பயிர் முதிர்வதற்கு முன்பே காய்ந்துவிடும்.

"சூடோமோனஸ் புளூரசன்ஸ்' என்ற எதிர் உயிர்க்கொல்லி மருந்தைக் கொண்டு, ஈரவிதை நேர்த்தி செய்ய வேண்டும். 60 லிட்டர் தண்ணீரில் 600 கிராம் மருந்தை கலந்து, 60 கிலோ விதையை, ஒருநாள் முழுக்க ஊறவைக்க வேண்டும். அதன் பின், முளைகட்டி நாற்றங்காலில் விதைக்க வேண்டும்.

நடவுக்கு முன்பாக, நாற்றங்காலில் இருந்து நாற்றுக்களை பிடுங்கி, அதன் வேர்களை மருந்து கரைசலில், ஹெக்டேருக்கு இரண்டரை கிலோ வீதம் சேர்த்து, ஒரு மணி நேரம் ஊறவைக்க வேண்டும்.

பரிந்துரைக்கப்படும் தழைச்சத்தை யூரியா மூலம் மூன்று அல்லது நான்கு முறையாக பிரித்து, மேல் உரமாக இடவேண்டும். யூரியா 5 மடங்கு, ஜிப்சம் 4 மடங்கு மற்றும் வேப்பம் புண்ணாக்கு ஒரு மடங்கு விகிதத்தில் கலந்து, ஒரு நாள் வைத்திருந்து மறுநாள் மேல் உரமாக இடலாம்.

விதை நேர்த்தி, நாற்று வேர் நனைத்தல் மற்றும் நட்ட 40, 50வது நாட்களில் இலைவழியாக, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் மருந்து கரைசல் தெளித்தல் முறைகளில், பாக்டீரியா நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன், எக்டேருக்கு "ஸ்ட்ரெப்டோமைசின்

சல்பேட்' 300 கிராம், "காப்பர் ஆக்ஸிகுளோரைடு' 1250 கிராம் என்ற அளவில் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**-ம.முத்தமிழன், பயிர் நோயியல் துறைத் தலைவர்,**
**பேராசிரியர்கள் ஐ.இயேசுராஜா, ரா.விமலா, ந.ரேவதி,**
**மதுரை விவசாயக் கல்லூரி.**

குறுஞ்செய்தி சேவையில் அரசு ஆர்வம் பணிகளைத் துரிதப்படுத்த தீவிரம்

**விருத்தாசலம்** : தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி, அரசுத்துறை நிறுவனங்கள் தனது பணிகளைத் துரிதப்படுத்த குறுஞ்செய்தி (எஸ்.எம்.எஸ்.,) சேவையில் ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்தியாவில் கொல்கத்தாவில் 1994ல் மொபைல் சர்வீஸ் புரோவைடர் கண்டுபிடிக்கப்பட்டு, 1995 முதல் மொபைல் சேவை துவங்கியது. இதன் மூலம் பி.எஸ். என்.எல்., ஏர்டெல், ஏர்செல், டாடா டெலிகாம், ஐடியா, ரிலையன்ஸ், வோடாபோன் உள்ளிட்ட 17 நிறுவனங்கள் மொபைல் சேவையில் ஈடுபட்டுள்ளன. மொபைல் போனை முதன் முதலாக தயாரித்த மோட்டரோலா உள்ளிட்ட 65 கம்பெனிகள் மொபைல் போன்களைத் தயாரித்து வருகின்றன.

அசுரத்தனமான தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் தொழில் போட்டியால் உள் மற்றும் அயல் நாடுகளுக்கான குறுஞ்செய்தி, எம்.எம்.எஸ்., அழைப்பு, கால் கட்டணங்கள் அதிரடியாக குறைக்கப்பட்டன. இதனால், தந்தி சேவையைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை குறைந்ததால், கடந்த ஜூலை 15ம் தேதியுடன் தந்தி சேவையை மத்திய அரசு ரத்து செய்தது.

அதைத் தொடர்ந்து தந்தி மூலம் தகவல் அனுப்பி வந்த நிறுவனங்கள், மொபைல் போன் குறுஞ்செய்திக்கு மாறின.

மத்திய அரசு வேளாண்துறை விவசாயிகளுக்குத் தேவையான தகவல்களை அனுப்ப, கிசான் கால் சென்டர்களை அமைத்து, வேளாண் விஞ்ஞானிகள் மூலம் விவசாய சாகுபடிக்குத் தேவையான விதை, உரங்கள், பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு குறித்து இலவச தொலைபேசி மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் தெரிவித்து வருகிறது. விவசாயிகள் எந்த மொழியில் பேசினாலும், அதற்கு ஏற்ப அந்த மொழியில் பதிலளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள மார்க்கெட் கமிட்டிகளில் கொள்முதல் விலை நிலவரங்களை விவசாயிகளுக்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்பும் முயற்சியில் வேளாண் வர்த்தகத்துறை இறங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து, தமிழகத்தில் நீதித்துறை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மனு நிலவரம் வழக்கறிஞர்களுக்குத் தெரிவிக்கும் வசதியை, கடந்த 23ம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும், மின்துறையும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு மின் கட்டண விவரங்களைக் குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்க, மொபைல் எண்களைப் பதிவு செய்யும் பணியில் இறங்கியுள்ளது.

தந்தி சேவை விடைபெற்றதையடுத்து, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை அரசுத் துறை நிறுவனங்கள் பயன்படுத்தி தனது பணிகளைத் துரிதப்படுத்த குறுஞ்செய்தி சேவையில் ஈடுபடுவது அதிகரித்து வருகிறது.

முதல்வருக்கு விவசாய சங்கம் கோரிக்கை மாயனூர் கதவணையை திறக்கணும்

**லாலாப்பேட்டை**: "மாயனூர் கதவணையை திறக்க, தமிழக முதல்வர் உத்தரவிட வேண்டும்' என, கரூர் மாவட்ட காவிரி பாசன விவசாயிகள் நலச்சங்கத்தின் செயல்தலைவர் மகாதானபுரம் ராஜாராம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது: மேட்டூர் அணையிலிருந்து, 85வது மைல் தொலைவில் கட்டளை படுகை அணை உள்ளது. இதன் மூலம் கிருஷ்ணராயபுரம் வாய்க்காலில், 1,200 ஏக்கர் நிலமும், தென்கரை வாய்க்காலில், 7,000 ஏக்கர் நிலமும், கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம், 20 ஆயிரத்து, 552 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. இதேபோல அணையிலிருந்து செல்லும் உய்யக்கொண்டான் வாய்க்கால் மூலம், 23 ஆயிரத்து, 742 ஏக்கர் நிலங்களும், புது அய்யன் வாய்க்காலில் 1,790 ஏக்கர் நிலங்களும், வடகரை வாய்க்காலில், 10 ஆயிரத்து, 400 ஏக்கர் நிலங்களும் என, மொத்தம், 64 ஆயிரத்து, 684 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த நிலங்களில் வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இந்நிலையில் காவிரி ஆற்றில் வெள்ளக்காலங்களில் கடலில் சென்று வீணாகும் தண்ணீரை சேமித்து வைக்க, மாயனூர் படுகை அணைக்கு அருகில்,

284 கோடி ரூபாய் கதவணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையில் பணிகள், 99 சதவீதம் முடிவடைந்துள்ள நிலையில் உள்ளது. இதனால் அணையின் பணிகளை விரைந்து முடித்து திறந்தால், அணையில் தேக்கி வைக்கப்படும், 1.5 டி.எம்.சி., தண்ணீரை கோடைகாலங்களில் குடிநீருக்காகவும், விவசாயத்துக்கும் பயன்படுத்தலாம். மேலும் வடகிழக்கு பருவமழை ஓரளவு பெய்துள்ள நிலையில், வரும் சித்திரை, பங்குனி, வைகாசி மாதங்களில் அணையை சுற்றியுள்ள ஜேடர்பாளையம் உள்ளிட்ட ,135 சதுர மைல் பரப்பளவில் கோடை மழை பெய்யும். இந்த மழை நீரையும் சேமிக்க முடியும். இதன் மூலம் ஆண்டுதோறும் மேட்டூர் அணை ஜனவரியில் மூடப்படும்போது, கோடை வறட்சியை சமாளிக்கலாம். மேலும் இந்த தண்ணீரைக் கொண்டு, கோடை வெயிலில் இருந்து தென்னை, எண்ணெய் பனை, வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால் ஆகியவற்றையும் பாதுகாக்க முடியும். எனவே மாயனூர் கதவணையை திறக்க முதல்வர் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

## தென்னையில் ஊடு பயிராக வாழை சாகுபடி ரூ.25 ஆயிரம் லாபத்தால் விவசாயிகள் தீவிரம்

**ராமநாதபுரம்**: ராமநாதபுரம் மாவட்டத்தில் முதன் முறையாக தென்னை விவசாயிகள் ஊடுபயிராக வாழை சாகுபடி செய்துள்ளனர். உழவு, உரமிடுதல் உள்ளிட்ட விவசாய செலவு போக, ஆண்டுக்கு 25 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைப்பதால் இதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

திருப்புல்லாணி, களிமண்குண்டு, பெரியபட்டியணம், ரெட்டையூரணி, வாலாந்தரவை, வழுதூர் உள்ளிட்ட பல கிராமங்களில் தென்னை விவசாயிகள் ஊடுபயிராக வாழை சாகுபடி செய்துள்ளனர். ஒவ்வொரு விவசாயியும் குறைந்தது ஒன்று முதல் ஐந்து ஏக்கரில் வாழை நடவு செய்துள்ளனர்.

உழவு, நடவு, தண்ணீர் பாய்ச்சல், உரமிடுதல் என, ஏக்கருக்கு குறைந்தது 10 ஆயிரம் ரூபாய் செய்தால், ஆண்டு முடிவில் செலவு போக, 25 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது.

திருப்புல்லாணி, முனியசாமி: நான்கு ஏக்கரில் தென்னை விவசாயம் செய்து வருகிறேன். வேளாண் அதிகாரிகள் ஆலோசனைப்படி, ஊடுபயிராக வாழைக்கன்று நடவு செய்துள்ளேன்.

"அட்மா' திட்டம் மூலம் வாழைக் கன்றுகள் மானிய விலையில் வழங்கப்பட்டது. 2 அடி இடைவெளியில் ஒரு கன்று வீதம் ஏக்கருக்கு 200 கன்றுகள் நடவு செய்தேன். இரு இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து, வாழைக் கன்றுகளுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகிறேன். மணல் கலந்த வண்டல் மண் என்பதால், 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சுகிறேன்.

முகூர்த்தம் மற்றும் விசேஷ நேரங்களில் வாழை இலைகளுக்கு கிராக்கி ஏற்படுவதால், தற்போது நல்ல விலை போகிறது. இன்னும் இரண்டு மாதங்களில் இலை அறுப்புக்கு வந்துவிடும். 10 மாதங்கள் கழித்து, விவசாய செலவு போக, 25 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும், என்றார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர், எஸ். அழகேசன்: நடப்பாண்டு 50 ஏக்கரில் இந்த சாகுபடி நடந்து வருகிறது. வாழை சாகுபடி விவசாயிகளுக்கு ரூ.4000 மானியம் வழங்கப்படுகிறது. உரமிடுதல், தொழில்நுட்பங்கள் குறித்து ஆலோசனை வழங்கி வருகிறோம், என்றார்.

## பங்குனி கடைசி அறுவடைக்கு பொன்னி சாகுபடியில் டிப்ளமோ வாலிபர் தீவிரம்

**ராமநாதபுரம்**: ராமநாதபுரம் அருகே பங்குனி கடைசி அறுவடைக்காக, பொன்னி நெல் சாகுபடியில் டிப்ளமோ வாலிபர் தீவிரம் காட்டி வருகிறார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 196 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. 94 ஆயிரம் விவசாயிகள், விவசாயப்பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இரண்டு ஆண்டுகளாக மழை பொய்த்ததால் பெரும்பாலான இடங்களில் நெல் விவசாயம் பெரிதும் பாதித்தது. இந்நிலையில் மழையால் கண்மாய்களில் நிரம்பும் தண்ணீரை நம்பி, பங்குனி மாத கடைசி அறுவடைக்காக டிப்ளமோ வாலிபர் ஒருவர், பொன்னி நெல் சாகுபடியில் தீவிரம் காட்டியுள்ளார்.

சக்கரக்கோட்டை கண்மாயில் தேங்கிய தண்ணீரை கொண்டு, உத்திரகோசமங்கை அருகே கீழச்சீத்தையைச் சேர்ந்த செல்வம், பொன்னி சாகுபடி குறித்து

கூறும்போது: டிப்ளமோ படித்துள்ளேன். படித்த இளைஞர்கள் பலர் விவசாயம் செய்ய கவுரவம் பார்க்கின்றனர். விவசாயம், இந்தியாவின் முதுகெலும்பு. விளைநிலங்களை பலர் வீட்டுமனைகளாக மாற்றியதால் நெல் சாகுபடி பாதித்து, ஆடுதுறை, சீரக சம்பா, அரிசி ரகங்கள் தமிழகத்தில் குறைந்துள்ளது.
தற்போது கர்நாடகா பொன்னி நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது. மாவட்டத்தின் இதர பகுதிகளில் செப்டம்பர் மாதத்தில் நாற்று நட்டு, டிசம்பரில் அறுவடை செய்வர்.rசக்கரக்கோட்டை பகுதியில் ஆறு ஆண்டுகளாக சித்திரை அறுவடைக்காக, தை முதல் நாளில் உழவுப்பணிகளை விவசாயிகள் துவக்குகின்றனர். இங்கு எட்டு ஏக்கர் நிலத்தில் 200 கிலோ கர்நாடகா பொன்னி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. சித்திரை முதல் வார அறுவடையில், 24 ஆயிரம் கிலோ நெல் கிடைக்கும். இதில் இருந்து 15 ஆயிரம் கிலோ அரிசி கிடைக்கும், என்றார்.

### கொய்யாவில் கூடுதல் சாகுபடி செய்ய முயற்சி : அடர் நடவில் அசத்தும் விவசாயிகள்

**விழுப்புரம்** :கொய்யா கன்றுகளை அடர் நடவு முறையில் கவாத்து செய்து, கூடுதல் மகசூல் பெறும் முயற்சியில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.
ஏழைகளின் ஆப்பிள், வெப்ப மண்டலங்களின் ஆப்பிள் என கொய்யாப் பழம் அழைக்கப்படுகிறது. ஆண்டிற்கு இரு முறை காய்க்கும் தன்மை கொய்யாவிற்கு உண்டு. மா, வாழை, ஆரஞ்சு மற்றும் ஆப்பிளுக்கு அடுத்ததாக முக்கியத்துவம் வாய்ந்த பயிராக கொய்யா உள்ளது.
ஐதராபாத்தில் உள்ள தேசிய ஊட்டச் சத்துக்கள் ஆய்வு நிறுவனம், 14 வகையான பழங்களை ஆய்வு செய்த போது, நோய் எதிர்ப்பு காரணியான ஆன்டி ஆக்சிடென்ட் அதிகம் உள்ளதாக கொய்யாப்பழம் கண்டறியப்பட்டுள்ளது.
அதிக விளைச்சல் கொய்யாப் பழத்தில் மனிதர்களுக்கு தேவையான நார்சத்து அதிகம் உள்ளது. பொட்டாசியம், வைட்டமின் சி மற்றும் லைக்கோபின் ஆகியன மற்ற பழங்களை விட, இதில் அதிகம் உள்ளது. இருப்பினும் மற்ற பழங்களை விட கொய்யாப் பழம் விழுப்பரம் மாவட்டத்தில் அதிகம் விளைவதால், குறைந்த

விலையில் விற்கப்படுகிறது. கொய்யாவின் முக்கியத்துவம் மற்றும் குறைந்த விலையில் கிடைப்பதால், பலரும் ஆர்வமாக வாங்கிச் சாப்பிடுகின்றனர். இதனால் தற்போது மக்களிடம் கொய்யாப் பழத்தின் தேவை அதிகரித்துள்ளது. அடர் நடவுஇதனால் பழைய முறைப்படி கொய்யா சாகுபடி செய்த விவசாயிகள், பல புதிய முறைகளை கையாண்டு சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். புதிய விவசாயிகள் பலரும் கொய்ய சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதனால் பலர் பழைய முறைப்படி 6 மீட்டர் இடைவெளியில் கொய்யா கன்று நட்டு பராமரிப்பதை தவிர்த்து வருகின்றனர். மேலும் தற்போது அடர் நடவு முறையில், 3 மீட்டர் இடைவெளியில் கொய்யா கன்றுகளை நட்டு பராமரிப்பு செய்கின்றனர். இதனால் இரட்டிப்பு அளவு மகசூல் கிடைக்கிறது. இரட்டிப்பு லாபம் அடர் நடவு முறையில் கொய்யா சாகுபடி செய்வதால் களையெடுத்தல், உரமிடுதல் போன்ற பணிக்கு ஆட்களின் தேவை குறைக்கப்படுகிறது.
வரிசைகளுக்கு இடையே ஊடு பயிராக மணிலா, உளுந்து மற்றும் காய்கறிகளும் சாகுபடி செய்யப்படுகின்றன. இதனால் கொய்யா மரங்கள் மூலமும், ஊடு பயிர்கள் மூலமும் விவசாயிகளுக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கிறது.
ஆனால் பழைய முறைப்படி, வளர்ந்துள்ள கொய்யாச் செடிகளின் நுனிப் பகுதியை வளைத்து, அதில் மணல் பைகளை கட்டி, புதிய தளிர்களை உருவாக்கும் முயற்சியில் சிலர் ஈடுபடுகின்றனர். இம்முறையில் புதிய தளிர்கள் குறைந்தளவே உருவாகின்றன. இதனால் செடிகளுக்கு உரமிடல், சூரிய வெளிச்சம் போன்றவை குறைவாகவே கிடைப்பதால், மகசூலும் குறைகிறது. மேலும் பழைய முறையை கையாளும் வயல்களில் ஊடு பயிர்கள் செய்ய வாய்ப்புகள் இல்லை.
எனவே புதிய முறைப்படி அடர் நடவு முறையை மேற்கொண்டு, வளர்ந்த கிளைகளை வெட்டி விட வேண்டும். இதனால் பல இடங்களில் புதிய தளிர்கள் துளிர் விட்டு, அதிக பூக்கள் வைப்பதால், கூடுதல் மகசூல் கிடைக்கிறது. ஜனவரி அல்லது ஜூன் மாதங்களில் கவாத்து செய்வது நல்லது.
நடவு செய்த இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பராமரித்தால், மற்ற ஆண்டுகளில் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்பதால், அடர் நடவில் காவத்து செய்வதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

## பூண்டு விற்பனையில் கிராமத்தினர் ஆர்வம்

**விக்கிரவாண்டி** : விக்கிரவாண்டி அடுத்த தொரவி கிராமத்தில் பலர் இணைந்து பூண்டு விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். விக்கிரவாண்டி அடுத்துள்ள தொரவி கிராமத்தை சேர்ந்த சிலர் மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம், குஜராத் பகுதிகளிலிருந்து பூண்டு மொத்தமாக கொள்முதல் செய்து லாரியில் ஏற்றி கொண்டு வந்துள்ளனர். அதை கிராமத்திலுள்ள பெண்களை வைத்து சுத்தம் செய்து தரம் பிரித்து புதுச்சேரி மாநிலம், விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலுள்ள அனைத்து கடைகளுக்கும் விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர். சிலர் வேன்களில் ஏற்றிச் சென்று சில்லரை விற்பனையில் ஈடுபடுகின்றனர்.ஆரம்பத்தில் ஒரு சிலர் மட்டுமே செய்த வியாபாரத்தை தற்போது கிராமத்திலுள்ள அனைத்து வீடு களிலும் குடிசை தொழில்கள் போல செய்கின்றனர்.கிராமத்திலுள்ள பெண்களும், ஆண்களும் ஒற்றுமையுடன் செய்வதால் மாவட்டத்திலுள்ள மற்ற கிராமங்களுக்கு முன் மாதிரி கிராமமாக தொரவி கிராமம் திகழ்கிறது. ஒரு கிலோ பூண்டு ரூபாய் 50 முதல் விற்பனை செய்கின்றனர்.

## விலையில்லா ஆடு, மாடுகள்: துணை இயக்குனர் ஆய்வு

**உளுந்தூர்பேட்டை** : களமருதூர் கால்நடைத்துறை மருத்துவர் பகுதிகளில் பயனாளிகளுக்கு வழங்கிய விலையில்லா ஆடு, மாடுகளை கால்நடை பராமரிப்புத்துறை துணை இயக்குனர் கிருஷ்ணன் நேரில் ஆய்வு செய்தார். களமருதூர், களவனூர், காம்பட்டு, பா.கிள்ளனூர், டி.ஒரத்தூர் பகுதிகளில் பயனாளிகளின் ஆடு, மாடுகள் குறித்து கேட்டறிந்து, பராமரிப்பு முறைகள் குறித்து ஆலோசனை வழங்கினார். கால் நடைகளுக்கு நோய் பாதிப்பு ஏற்பட்டால் கால் நடைத் துறை மருத்துவரின் உதவியை நாடுமாறு அறிவுறுத்தினார். 100 சதவீதம் மானியத்துடன் கூடிய தீவன வளர்ப்பு திட்டம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.விழுப்புரம் மண்டல இணை இயக்குனர் தேவராஜ், கால்நடை அபிவிருத்தி மற்றும் தீவன பெருக்க துணை இயக்குனர் அப்சல், திருக்கோவிலூர் கோட்ட உதவி இயக்குனர் குபேந்திரன், கால்நடை மருத்துவர்கள் சுரேஷ்குமார், இளங்கோ உடனிருந்தனர்.

## 'பயிர் செய்யும் முன் மண் பரிசோதனை செய்க'

**கோவை** : "விவசாய நிலங்களுக்கு இயற்கை உரங்களை பயன்படுத்துவதே சிறந்த முறையாகும்" என, வேளாண் பல்கலை பயிர் மேளாண்மை துறை இயக்குனர் வேலாயுதம் பேசினார்.கோவை வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுனத்தில் மண் பரிசோதனை குறித்த கருத்தரங்கு நேற்று நடந்தது. இதில் வேளாண் பல்கலை பயிர் மேலாண்மை துறை இயக்குனர் வேலாயுதம் பேசியதாவது:

தமிழகத்தில் காலங்காலமாக இயற்கை முறை விவசாயத்தைதான் நம் விவசாயிகள் செய்து வந்தனர். 1950ம் ஆண்டுகளில் இயற்கை விவசாயம் மூலம் 50 மில்லியன் டன்கள் உணவு உற்பத்தி செய்யப்பட்டது.

1960ம் ஆண்டுகளுக்கு பிறகு, மக்கள் தொகையில் எண்ணிக்கை அதிகரித்ததால், உணவு உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால், விஞ்ஞான முறைகளை பின்பற்றி விவசாயம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அதிக அளவில் ரசாயன உரமங்களை பயன்படுத்தியதால், மகசூல் அதிகம் கிடைத்தது. தொடர்ந்து ரசாயன உரங்களை பயன்படுத்தியதால் மண் வளம் பாதிக்கப்பட்டு விட்டன. இனி விவசாயிகள் ரசாயன உரங்களை பயன்படுத்துவதை தவிர்த்து இயற்கை உரங்களை பயன்படுத்துவதே நல்லது என, வேளாண் விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

உலக அளவில் 10 மில்லியன் எக்டர்கள் நிலங்கள் மண் வளம் பாதிக்கப்பட்டு விவசாயம் செய்ய பயன்படாமல் இருப்பதாக சமீபத்திய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது. இதில், தமிழகத்தில் மட்டும் 4.5 லட்சம் எக்டர் நிலம் மண் வளம் பாதிக்கப்பட்டு உள்ளன. இனி வரும் காலங்களில் விவசாய நிலங்களுக்கு உரமாக ஆடு, மாடுகளின் சானம் மற்றும் தாவர உரங்களை பயன்படுத்துவதுதான் சிறந்தது.  இதில், பயிருக்கு தேவையான அனைத்து சத்துக்களும் உள்ளன. முன்பு விவசாய தொழிலுக்கு கால்நடைகளை பயன்படுத்தியதால் அதிக எண்ணிக்கையில் ஆடு, மாடுகள் அதிகம் வளர்க்கப்பட்டன. இப்போது நவீன கருவிகளை பயன்படுத்துவதால், அவற்றின் எண்ணிக்கையும் குறைந்து விட்டன. அதனால்

கால்நடை எருக்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு இயற்கை உரங்களை பயன்படுத்துவதோடு, பயிர் செய்யும் முன் மண் பரிசோதனை செய்து கொள்வது அவசியமாகும்.

இவ்வாறு, வேலாயுதம் பேசினார். வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன இயக்குனர் கிருஷ்ணகுமார், ஆராய்ச்சி குழு ஒருங்கிணைப்பாளர் ரகுநாத், வன நில பயன்பாடு மற்றும் பருவநிலை மாற்ற துறைத்தலைவர் பிரசாதந்த், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் சூரியபிரபா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

பாரம்பரியமிக்க காட்டு யானம் நெல் ரகம் திரும்புகிறது :அறிக்கை சமர்ப்பிக்க ஆட்சியர் உத்தரவு

**திருவள்ளூர்** : மாவட்டத்தில், புதிய முயற்சியாக, பாரம்பரியமிக்க காட்டு யானம் நெல் ரகம் பயிரிடப்பட்டு உள்ளது. இந்த நெல் ரகம் குறித்து, ஆய்வு செய்து அறிக்கை தருமாறு, வேளாண் அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவிட்டு உள்ளார். பாரம்பரிய நெல் ரகங்களில் ஒன்று, காட்டு யானம். ஏழு அடி உயரம் வளரக்கூடியது. ஒவ்வொரு கதிரிலும், நெல் மணிகள், கொத்து, கொத்தாக விளையும் ரகம்.

திருவாலங்காடு ஒன்றியம், ராமாபுரம் கிராமத்தில், ஒன்றே முக்கால் ஏக்கர் பரப்பளவில், விவசாயி பாரதி என்பவர், காட்டு யானம் நெல் ரகத்தை பயிரிட்டுள்ளார்.

10 மடங்கு லாபம்

l ஒரு ஏக்கருக்கு, ஒன்றரை கிலோ விதை நெல் போதுமானது.

l வயலில் விதைத்த, 18 நாட்களில், நாற்று தயாராகி விடும்.

l நாற்றை, ஒரு அடி இடைவெளியில் நட வேண்டும்.

l 165 நாளில், பயிர் அறுவடைக்குத் தயாராகி விடும்.

l உரம் தேவையில்லை என்பதால், அதிக செலவு இருக்காது.

l ஒரு ஏக்கருக்கு, 20 - 25 மூட்டை நெல் கிடைக்கும்.

l இதில், சராசரியாக, 1000 கிலோ அரிசி கிடைக்கும்.

l சந்தையில், ஒரு கிலோ அரிசி 150 ரூபாய்.

l ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும்.

l ஏக்கருக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கும்.

இந்த காட்டு யானம் நெல் ரகம் குறித்து, விவசாயி பாரதி கூறுகையில், "நமது மூதாதையர்களால் பயிரிடப்பட்டு வந்த, பாரம்பரிய நெல் ரகம் இது. களையெடுக்க வேண்டாம். மழை, வெள்ளம் மற்றும், வறட்சியை தாங்கி வளரும். நெற்பயிரின் இலை, தண்டுப் பகுதி மிகவும் வீரிய வளர்ச்சியுடன் உள்ளதால், பூச்சி, நோய் தாக்குதல் இல்லை," என்றார்.

மேலும், அவர் கூறுகையில், "மண்வளம், நீர் வளத்துடன், நம் உடல் நலத்தையும், காக்கும் வலிமையுடையது. காட்டு யானம் நெல் ரகம் எளிதில் ஜீரணமாகக் கூடியது. இது, சர்க்கரை நோய், ரத்தக் கொதிப்பு, மலச்சிக்கல், நரம்புகளை பலப்படுத்துதல் போன்ற, மருத்துவ குணம் கொண்டது,"என்றார்.

வேளாண் அதிகாரிகளுக்கு உத்தரவு கடந்த, 24ம் தேதி, ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்திற்கு, விவசாயி பாரதி, காட்டு யானம் நெல் பயிருடன் வந்தார். அவரிடம் விவரங்களை கேட்டறிந்த, ஆட்சியர் வீர ராகவ ராவ், வியப்படைந்தார். மேலும், இந்த நெல் ரகம் குறித்து, ஆய்வு செய்து, அறிக்கை தயாரித்து கொடுக்குமாறு, வேளாண் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## ரூ.2 விலையில் உலர் தீவனம்: வறட்சியை சமாளிக்க அதிகாரிகள் ஏற்பாடு

**திருப்பூர்** : ""மாவட்டத்தில் நான்கு இடங்களில் அமைக்கப்பட உள்ள கிடங்கு மூலமாக, கால்நடைகளுக்கு தேவையான உலர் தீவனத்தை, மானிய விலையில் பெற்று பயனடையலாம்," என கலெக்டர் தெரிவித்தார். விவசாயிகள் குறைகேட்பு கூட்டம், திருப்பூர் கலெக்டர் அலுவலகத்

தில், நடந்தது. வறட்சியால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், உலர் தீவனம் வழங்குவது குறித்து விளக்கப்பட்டது. கலெக்டர் கோவிந்தராஜ் பேசியதாவது: பருவமழை பெய்யாததால், மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து, விவசாயத்துக்கு தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. மேய்ச்சலுக்கு புல் இல்லாததால், சோளம் மற்றும் மக்காச்சோளம் சரியாக விளையாததாலும், வீரிய கால்நடை தீவன உற்பத்தி

பரப்பளவு குறைந்த காரணத்தாலும், கால்நடை தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், தீவனத்தின் விலை உயர்ந்துள்ளது.

கால்நடை வளர்க்கும் விவசாயிகளின் நலன் கருதி, தமிழக அரசு உலர் தீவனத்தை மானிய விலையில் வழங்க திட்டமிட்டு, 12.50 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்படி, ஒரு கிலோ வைக்கோல் இரண்டு ரூபாய் என்ற மானிய விலையில், ஒரு மாட்டுக்கு ஒரு நாளைக்கு மூன்று கிலோ வீதம், அதிகபட்சம் ஐந்து மாடுகளுக்கு, வாராந்திர தேவை அடிப்படையில் வழங்கப்படும். தொடர்ந்த, மூன்று மாதங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில், செங்கப்பள்ளி, காங்கயம், மூலனூர், வாளவாடி ஆகிய நான்கு இடங்களில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனைகளில் தீவன கிடங்கு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக, தலா 10 லட்சம் வீதம் 40 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிடங்கிலும், தலா 1,500 விவசாயிகள் வீதம், மாவட்டத்தில் 6,000 விவசாயிகளுக்கு, 600 டன் அளவுக்கு உலர் தீவனம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்காக, விவசாயிகளுக்கு கால்நடை விவரங்களுடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு இன்று (நேற்று) முதல் வழங்கப்படும்.

கால்நடை வளர்ப்போர், ரேஷன் கார்டு நகல், உரிமையாளர்களின் பாஸ்போர்ட் அளவு போட்டோ இரண்டு நகல் மற்றும் கால்நடைகளின் இருப்பு விவரங்களுடன், அருகில் உள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் கொடுத்து பதிவு செய்துகொள்ள வேண்டும், என்றார். நிகழ்ச்சியில் 27 பயனாளிகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் வழங்கும் அட்டை வழங்கப்பட்டது.

## குன்னூரில் தேயிலைக்கு சிவப்பு சிலந்தி நோய்!

**குன்னூர்** : குன்னூர் பகுதிகளில் தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி நோய் தாக்குதலால், தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலை வரத்து குறைய துவங்கியுள்ளது. நீலகிரி மாவட்டத்தில், இந்தாண்டு ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால், பனிப்பொழிவின் தாக்கம் அதிகரித்துள்ளது. குறிப்பாக, தேயிலை

சாகுபடி அதிகளவில் மேற்கொள்ளப்படும் குன்னூரில், பல இடங்களில் தேயிலை செடிகள் கருகியுள்ளன.

பந்துமி, அணியாடா, ரேலியா அணைப்பகுதி, எடப்பள்ளி, இளித்தொரை, காமராஜபுரம் ஆகிய பகுதிகளில் தற்போது தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் தென்பட துவங்கியுள்ளது; இதனால், பசுந்தேயிலை மகசூல் குறைந்து, தேயிலை தொழிற்சாலைகளில், தேயிலை துாள் தயாரிப்பு குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. நீலகிரி சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் ரமேஷ்போஜராஜ் கூறுகையில், “சிவப்பு நிற சிலந்தி தாக்குதால், வரத்து குறையும்; இருப்பினும், தேயிலை துாளின் தரம் உயரும்,” என்றார்.

தென்னிந்திய தேயிலை தோட்ட அதிபர்கள் சங்க வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் கூறுகையில்,'காலநிலை மாற்றம், போதிய ஈரப்பதம் இல்லாததால், தேயிலையில் சிவப்பு சிலந்தி நோய் தாக்குதலால் அதிகரிக்கிறது. இதனை கட்டுப்படுத்த தேயிலை செடிகளின் மீது வெயில் அதிகம் படும்படியும், நிழல் தரும்படி உள்ள கிளைகளை அகற்ற வேண்டும்' என்றனர்.

## வெயிலின் தாக்கம் அதிகரிப்பால் தேயிலை பாதுகாப்பு பணிகள் தீவிரம்

**கூடலூர்** : கூடலூர் பகுதியில் வெயிலின் தாக்கத்திலிருந்து தேயிலை நாற்றுகளை பாதுகாக்கும் பணிகள் நடந்து வருகின்றன. கூடலூர் பகுதியில் பனிபொழிவை தொடர்ந்து, வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. வறட்சியால் தேயிலையை பாதுகாக்க விவசாயிகள் "ஸ்பிங்ளர்' மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இந்நிலையில், புதிய தேயிலை நாற்றுகள் வெயிலின் தாக்கத்தால் பாதிக்கும் அபாயம் உள்ளது. அதனை காக்க, தண்ணீர் ஊற்றுவதுடன், நாற்றுகளை பாதுகாக்கும் வகையில், அதனை சுற்றிலும், காய்ந்த புற்களை பரப்பி மூடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். "இதன் மூலம், தேயிலை நாற்றுகள் நடவு செய்த பகுதியில், ஈர தன்மை அப்படியே இருக்கும். நாற்றுகளும் நன்கு வளரும்' என, விவசாயிகள் தெரிவித்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### தண்ணீர் வரத்து அதிகரிப்பு: பூண்டி ஏரி நீர்மட்டம் உயர்வு



ஊத்துக்கோட்டை : கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணாநீர் திறப்பு அதிகரித்துள்ளதால் பூண்டி நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது.ஆந்திர, தமிழக நதிநீர் ஒப்பந்தப்படி தமிழகத்துக்கு ஆண்டுதோறும் 15 டிஎம்சி தண்ணீர் தரவேண்டும். 3 டிஎம்சி சேதாரம் போக 12 டிஎம்சி வழங்க வேண்டும். அதன்படி, ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து கடந்த ஆண்டு ஜூலை 1ம்தேதி வினாடிக்கு 200 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. படிப்படியாக 700 கன அடி திறக்கப்பட்டது.பின்னர் உப்பளமடுகு பகுதியில் புதிய கால்வாய் அமைக்கப்பட்டு கண்டலேறு அணையில் இருந்து வினாடிக்கு 2000 கன அடி திறக்கப்பட்டது. 2 நாட்களில் 2500 கன அடியாக உயர்த்தப்பட்டது. கடந்த 12ம் தேதி தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாய்ன்ட்டுக்கு 15 கன அடியாக வந்த தண்ணீர், கடந்த 14ம் தேதி 114 கன அடியாகவும், 19ம் தேதி 147 கன அடியாகவும் அதிகரித்தது.

கடந்த 26ம்தேதி 226 கன அடியாகவும், 27ம் தேதி 270 கன அடியாகவும் உயர்ந்தது.நேற்று காலை 6 மணி நிலவரப்படி 293 கன அடியாக வந்துகொண்டு

இருக்கிறது. பூண்டி ஏரிக்கு நேற்று காலை 6 மணிக்கு 262 கன அடி செல்கிறது. இங்கிருந்து புழல் ஏரிக்கு 70 கன அடியும், பேபி கால்வாய் வழியாக 10 கன அடியும் அனுப்பப்படுகிறது. கிருஷ்ணா கால்வாயில் தண்ணீர் வரத்து அதிகரித்ததால் பூண்டி ஏரியின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.பூண்டி ஏரியில் கடந்த 19ம்தேதி 123 மில்லியன் கன அடியாக இருந்த தண்ணீர், தற்போது 202 மில்லியன் கன அடியாக உயர்ந்துள்ளது. ஆனாலும் இதுவரை தமிழகத்துக்கு 2 டிஎம்சி தண்ணீரே வந்துள்ளது.

**அரூர் பகுதியில் வரத்து அதிகரிப்பால் ஆரஞ்சு பழம் விலை குறைவு**

அரூர்,: மகாராஷ்டிரா, ஆந்திரா உள்ளிட்ட பல மாநிலங்களிலிருந்து அதிக அளவில் ஆரஞ்சு பழங்கள் தமிழகத்திற்கு வரத் துவங்கியுள்ளதால், விலை வெகுவாக குறைந்துள்ளது. அரூர் சாலையோரங்கள், தள்ளு வண்டிகளில் ஆரஞ்சு பழங்கள் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மருத்துவ குணம் நிறைந்த ஆரஞ்சுப் பழம், தனது சுவையால் பல்வேறு தரப்பினரையும் ஈர்க்கும் தன்மை உடையது. கர்ப்பிணி பெண்கள், நோயாளிகள் உள்பட அனைத்து தரப்பினரும் விரும்பி சாப்பிடுவதுடன் வயிறு சம்மந்தமான பிரச்சனைகளுக்கு ஆரஞ் சுக்கு நிகரானது எதுவும் இல்லை என்பதால், இந்தப் பழங்களை அதிக அளவில் உணவில் சேர்த்து கொள்ள மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

இதனால், மக்கள் அதிக அளவில் ஆரஞ்சு வாங்கி செல்கின்றனர். கடந்த மாதங்களில் விலை அதிகரித்து காணப்பட்ட ஆரஞசு பழங்கள் வரத்து அதிகரித்துள்ளதால், தற்போது, அரூர் சாலையோரங்களில் கிலோ ரூ50க்கு மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. விலை குறைவாக இருப்பதுடன் கண்ணை கவரும் வண்ணத்தில் சாலையோரம் வைத்திருப்பதை பார்க்கும் போதே வாங்க தூண்டும் வகையில் இருப்பதால் ஏராளமானோர் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

**வரத்து உயர்வால் பூசணிக்காய் விலை சரிவு**

சேலம், : வரத்து அதிகரிப்பால் பூசணிக்காய் விலை கிலோவிற்கு ரூ8 வரை குறைந்துள்ளது. சேலம் மார்கெட்டிற்கு, ஆத்தூர், வாழப்பாடி, தலைவாசல், ஓமலூர், பணமரத்துப்பட்டி, ஊத்தங்கரை, திருவண்ணாமலை, செஞ்சி ஆகிய இடங்களில் இருந்து பூசணிக்காய் விற்பனைக்கு வருகிறது. தை, மாசி ஆகிய மாதங்கள் பூசணிக்காய் சீசனாகும். இதனால் மார்கெட்டிற்கு வரத்து அதிகரித்துள்ளது. தற்போது வாரத்திற்கு 6 முதல் 8 டன் வரை பூசணிக்காய் வரத்து வருகிறது. சென்ற மாதம் ரூ20 வரை விற்பனையான பூசணிக்காய், தற்போது ரூ8 வரை விலை குறைந்து, கிலோ ரூ10 முதல் ரூ12 வரை விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், முகூர்த்த சீசன் வரை பூசணிக்காய் இதே விலையில் விற்பனையாகும். அதன் பின் விலை சற்று அதிகரிக்கும் என்றனர்.

**மக்காசோளம் விலை உயர்வு**

பரமத்திவேலூர், : நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அருகே சோழசிராமணி, ஆனங்கூர், அய்யம்பாளையம், கபிலர்மலை, பரமத்தி சுற்று வட்டார பகுதிகளில் அதிகளவில் மக்காசோளம் சாகுபடி செய்யப்படுகிறது. இதை அப்பகுதி விவசாயிகள் அறுவடை செய்து, வியாபாரிகள் மூலம் கோழிப்பண்ணைக்கும், தீவன அரவை மில்லுக்கும் அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரம் 100 கிலோ மூட்டை ரூ.1,230க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த வாரம் ரூ.1,250க்கு விலை போனது. கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் மூட்டைக்கு ரூ.30 கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**30 ம் தேதி முதல் வேளாண்மை இயந்திர செயல் விளக்கம்கலெக்டர் தகவல்**

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் வேளாண் மைப் பொறியியல் துறை சார்பில் வேளாண்மை இயந்திரங்களின் செயல் விளக்கம் நடைபெற உள்ளது.
தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் வேப்பத்தூர் கிராமத்தில் வரும் 30ம் தேதி நெல்நடவு இயந்திரம், தஞ்சை ஒன்றியம் களிமேடு கிராமத்தில் மரம் நட

குழிபோடும் கருவி, மருங்குளம் கிராமத்தில் வரும் 30ம் தேதி லேசர் லெவலர் இயந்திரம், தஞ்சை ஒன்றியம் துறையூரில் பிப். 1ம் தேதி நெல் நடவு இயந்திரம், மதுக்கூர் ஒன்றியம் புலவஞ்சி கிராமத்தில் 4ம் தேதி நேரடி நெல் விதைப்பு கருவி, பட்டுக்கோட்டை ஒன்றியம் பெரியகோட்டையில் 5ம் தேதி நேரடி நெல் விதைப்பு கருவி, அதே கிராமத்தில் 11ம் தேதி லேசர் லெவலர் இயந்திரம், பேராவூரணி ஒன்றியம் குறிச்சி கிராமத்தில் 13ம் தேதி வைக்கோல் கட்டும் கருவி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கருவிகரம்பை கிராமத்தில் 18ம் தேதி ரோட்டோவேட்டர், தென்னை மரம் ஏறும் கருவி செயல்விளக்கம் நடைபெற உள்ளது. இதில் அந்தந்த பகுதி விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற கலெக்டர் சுப்பையன் அழைப்பு விடுத்துள்ளார்.

**டெல்டா பகுதிகளில் நெல் அறுவடை தொடங்கியது ஆள்பற்றாக்குறையால் விவசாயிகள் அவதி100 நாள் வேலையை நிறுத்தி வைக்க கோரிக்கை**

திருவிடைமருதூர் : திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் பகுதிகளில் பயிரிடப்படட சம்பா, தாளடி நெற்பயிர் அறு வடை தொடங்கியுள்ளது. இந்நிலையில் அறுவடைக்கு ஆள் பற்றாக்குறை ஏற்படுவதை தடுக்க 100 நாள் வேலைத்திட்ட பணிகளை நிறுத்தி வைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் பகுதிகளில் 19ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட சம்பா, தாளடி நெற்பயிர் அறுவடை தொடங்கியுள்ளது. திருவிடைமருதூர் பகுதியில் 10 ஆயிரத்து. 191 ஹெக்டேரி லும், திருப்பனந்தாள் பகுதி யில் 9ஆயிரத்து 300 ஹெக்டேரிலும் என 19ஆயிரத்து 500 ஹெக்டேரில் நெற்பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் துவங்கி தொடர்ந்து ஆகஸ்ட் மாதம் வரை சம்பா, தாளடிக்கான வேலைகள் துவங்கி நடவு பணிகள் நடைபெற்று வந்தது.அதில் நீண்ட கால பயிரான சி.ஆர் 1009, வெள்ளை பொன்னி உள்ளி ட்ட ரகங்களும் மத்திய கால பயிரான ஆடுதுறை 38, 44, பி.பி.டி பொன்னி ஆகிய ரகங்களும் திருவிடைமருதூர், திருப்பனந்தாள், அதனை சுற்றியுள்ள கிராமஙள் களான நாச்சியார்கோவில், கூகூர், சிவபுரம், திருநாகேஸ்வரம், திருநீலக்குடி,

பந்தநல்லூர்,சோழபுரம் உள் ளிட்ட 300 க்கும் மேற்பட்ட கிராமஙகள் மற்றும் நகர பகுதியை ஒட்டி உள்ள நில ங்களில் நெல் பயிரிடப்பட்டது.

வேளாண்மை துறை அறிவுறுத்தலின் படி உரமிடுதல், பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த பூச்சிகொல்லி மருந்து தெளித்தல், பயிருக்கு, களை எடுத்தல், போன்ற பயிர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளை செய்து வந்தனர். இந்த நிலையில் தண¢ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு அதிக அளவில் களை வளர்ந்தது. அதை அப்புறப்படுத்த பல மடங்கு செலவு ஏற்பட்டது. மேலும், குளம், குட்டை, ஆறு ஆகிய நீர் நிலைகளில் இருந்து வாய்ப்புள்ள விவசாயிகள் வாடகைக்கு பைப் மற்றும் இன்ஜின் மூலம் உயிர் தண்ணீர் பாய்ச்சியதால் வழக்கத்தைவிட செலவு அதிகரித்தது . இந்நிலையில் நடவு செய்த நெற்பயிர்கள் தற்போது படிப்படியாக அறுவடைக்கு தயாராக¤யுள்ளது.

பல்வேறு இன்னல்களுக்கிடையே விவசாயம் செய்த நிலையில், தற்போது விவசாய பணிகளுக்கு ஆள் பற்றாக்குறை ஏற்பட்டு அறுவடை பணிகளும் பாதிக்கபட்டு வருகிறது. எனவே இந்த நிலையை போக்க கிராம பகுதிகளில் நடைபெற்று வரும் 100 நாள் வேலை பணியை நிறுத்தி வைத்து அறுவடைக்கு ஏற்படும் ஆள் பற்றாக் குறையை போக்க விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.இதுகுறித்து திருவிடைமருதூர் அருகேயுள்ள அண்டக்குடையான் கிராமத்தை சேர்ந்த விவசாயி முத்து கூறுகையில்; தற்போது கிராமபகுதிகளில் விவசாயம் சம்மந்தமான வேலைகளை தவிற் த்து நகரபகுதிகளில் நடை பெரும் கட்டிட பணிகளுக்கும் ,சாலைபணிகளுக் கும் வேலை ஆட்கள் சென்று விடுகின்றனர். ஏற்கனவே விவசாய பணிகளுக்கு கடும் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுவரும் நிலையில் எஞ்சியுள்ள வேலை ஆட்களும் 100 நாள் பணிக்கு சென்று விடுகின்றனர்.இதனால் அறுவடைபணிகளுக்கு ஆள் இல்லாத நிலை ஏற்படுகிறது. எனவே அறுவடை பணிகள் நடைபெறும் இக்காலத்தில் 100 நாள் பணியை அரசு நிறுத்தி வைத்தால் நஷ்டத்தால் குறைந்து வரும் விவசாயத்தை ஓரளவிற்கு தடுத்து நிறுத்தலாம் என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஏப்ரல்—நவம்பர் மாத காலத்தில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 46% உயர்வு**



பி கே கிருஷ்ணகுமார்

கொச்சி

ஏப்ரல்—நவம்பர் மாத காலத்தில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 46 சதவீதம் உயர்ந்து ரூ.8,377 கோடியாக அதிகரித்துள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ஏற்றுமதி ரூ.5,732 கோடியாக இருந்தது. கணக்கீட்டு காலத்தில் அளவின் அடிப்படையில் நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி 3.98 லட்சம் டன்னிலிருந்து 5.09 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

புதினா தயாரிப்புகள்

புதினா தயாரிப்புகளின் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 129 சதவீதம் வளர்ச்சி கண்டதால் ஒட்டுமொத்த அளவில் நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி நன்கு அதிகரித்துள்ளது. ஏப்ரல்—நவம்பரில் சுமார் 16 ஆயிரம் டன் புதினா பொருட்கள் ரூ.1,975 கோடிக்கு ஏற்றுமதியாகி உள்ளன. மதிப்பு அடிப்படையில் இப்பொருட்களின் ஏற்றுமதி 62 சதவீதம் உயர்ந்துள்ளது.

நவம்பர் வரையிலான எட்டு மாதங்களில் ரூ.1,614 கோடிக்கு 1.82 லட்சம் டன் மிளகாய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சீரகம் ஏற்றுமதி அளவு அடிப்படையில் 95 சதவீதம் அதிகரித்து 86,500 டன்னாகவும், மதிப்பு அடிப்படையில் 90 சதவீதம் உயர்ந்து ரூ.1,151 கோடியாகவும் அதிகரித்துள்ளது. நறுமண எண்ணெய் மற்றும் ஓலியோரெசின் ரூ.1,111 கோடிக்கும், கறிமசாலா தூள் மற்றும் பேஸ்ட் வகைகள் ரூ.230 கோடிக்கும் ஏற்றுமதியாகியுள்ளன. மேற்கண்ட பொருள்கள் முறையே மதிப்பின் அடிப்படையில் 48 சதவீதம் மற்றும் 47 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளன.

மிளகு ஏற்றுமதி 42 சதவீதம் உயர்ந்து 13,700 டன்னாகவும், மஞ்சள் ஏற்றுமதி 41 சதவீதம் வளர்ச்சி கண்டு 50,500 டன்னாகவும் அதிகரித்துள்ளது. தனியா ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் 119 சதவீதம் அதிகரித்து ரூ.236 கோடியாகவும், அளவு அடிப்படையில் 47 சதவீதம் உயர்ந்து 29,800 டன்னாகவும் அதிகரித்துள்ளது.

ஜாதிக்காய்

ஏப்ரல்–நவம்பர் மாத காலத்தில் ஜாதிக்காய் மற்றும் சாதிபத்திரி ஏற்றுமதி ரூ.198 கோடிக்கு 3,350 டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது அளவின் அடிப்படையில் 90 சதவீதமும், மதிப்பு அடிப்படையில் 56 சதவீதமும் அதிகமாகும். சிறு ஏலக்காய் ஏற்றுமதி 38 சதவீதம் உயர்ந்து 1,805 டன்னாக (ரூ.144 கோடி) உயர்ந்துள்ளது.

**கண்டலேறு அணை திறப்பு தண்ணீர் வரத்து அதிகரிப்பால் பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர்வு**



**ஊத்துக்கோட்டை,**

கண்டலேறு அணை திறக்கப்பட்டு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

<u>தண்ணீர் திறப்பு</u>

கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் பூண்டி ஏரிக்கு கடந்த 13–ந் தேதியில் இருந்து வந்து கொண்ருக்கிறது. கண்டலேறு அணையில் இருந்து முதலில் வினாடிக்கு 500 கன அடி வீதம் திறத்து விடப்பட்டது. தற்போது வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் திறந்து விடப்பட்டுள்ளது.

பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. நேற்று மதியம் 1 மணி நிலவரப்படி நீர் மட்டம் 19.42 அடியாக பதிவானது. 202 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு கிருஷ்ணா நதி நீர் வினாடிக்கு 262 கனஅடி விதம் வந்து கொண்ருக்கிறது.

<u>நீர்மட்டம் உயர்வு</u>

நீர் வரத்து அதிகரித்து உள்ளதால் பூண்டி ஏரியின் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த 13–ந் தேதி நீர் மட்டம் 17.61 அடியாக இருந்தது. இது படிப்படியாக அதிகரித்து 19.42 அடியாக உயர்ந்தது. அதாவது 13–ந் தேதியில் இருந்து நேற்று வரை சுமார் 2 அடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனிடையே நீர் வரத்து 13–ந் தேதி 13 கனஅடி, 14–ந் தேதி 55 கனஅடி என்று படிப்படியாக அதிகரித்து நேற்று 262 கனஅடியாக தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

இதனால் நீர் இருப்பும் அதிகரித்து வருகிறது. 13–ந் தேதி 93 மில்லியன் கன நீர் இருப்பு இருந்தது. இது படிப்படியாக அதிகரித்து நேற்று 202 மில்லியன் கன அடியாக உயர்ந்தது. பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு லிங்க் கால்வாய் மூலம் வினாடிக்கு 80 கனஅடி விதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

**மேட்டூர் அணை மூடல் எதிரொலி: நாமக்கல் மாவட்ட காவிரி வாய்க்கால்களில் தண்ணீர் எடுக்க தற்காலிக தடை**

**பரமத்தி வேலூர்,**

பரமத்தி வேலூர் பொதுப்பணித்துறை இளம் பொறியாளர் தர்மலிங்கம் விடுத்துள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:- மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கான தண்ணீர் நிறுத்தப்பட்டது. மேட்டூர் பாசன காலத்தில் காவிரி ராஜா, கொமாரபாளையம் மற்றும் மோகனூர் ஆகிய வாய்க்கால்களில் இருந்து அரசு அனுமதி அளித்ததின் பேரில் நீரேற்று பாசனத்திற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. பாசன காலங்களில் மட்டும் இறவை பாசனத்திற்கு தண்ணீர் எடுக்க வேண்டும். பாசன காலங்களில் தண்ணீர் நிறுத்தப்படும் போது இறவை பாசனத்திற்கு தண்ணீர் எடுக்கக்கூடாது என அரசு அறிவித்து உள்ளது.

இந்த நிலையில் மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கான தண்ணீர் நிறுத்தப்பட்டு உள்ளது. எனவே காவிரி ஆற்றில் இருந்து வரும் தண்ணீரை குடிநீருக்காக மட்டும் பயன்படுத்த வேண்டும். பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் வரை, நாமக்கல் மாவட்டத்தில் காவிரி மற்றும் ராஜா, கொமாராபாளையம் மற்றும் மோகனூர் வாய்க்கால்களில் இருந்து இறவை பாசனத்திற்காக கூட்டுறவு நீரேற்று பாசன சங்கங்கள் மற்றும் தனி நபர்கள் யாரும் தண்ணீர் எடுக்கக்கூடாது.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**காதலர் தினத்தை முன்னிட்டு ஓசூரில் இருந்து வெளிநாடுகளுக்கு செல்லும் ஒரு கோடி ரோஜாக்கள்**



ஓசூர்,

காதலர் தினத்தை முன்னிட்டு ஓசூரில் இருந்து வெளிநாடுகளுக்கு ஒரு கோடி ரோஜாக்கள் ஏற்றுமதி செய்யப்பட உள்ளது. இன்னும் 15 நாட்களே உள்ள நிலையில் இதற்கான ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

காதலர் தினம்

உலகம் முழுவதும் வாழக்கூடிய காதலர்களால் பிப்ரவரி மாதம் 14–ந் தேதி காதலர் தினம் கொண்டாடப்படுகிறது. வாழ்த்து அட்டைகள், பரிசுப்பொருட்கள் போன்றவற்றை காதலர்கள் கொடுத்து அன்பை பரிமாறிக்கொள்வார்கள். இப்படி எத்தனையோ பரிசுப்பொருட்கள் வழங்கினாலும், ரோஜாப்பூக்கள் தான் அதில் முக்கிய இடம் பிடிக்கிறது.

இத்தகைய ரோஜாக்கள் அதிகம் உற்பத்தியாகும் இடமாக கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் உள்ளது. இங்குள்ள தட்பவெப்ப நிலை மற்றும் மண்வளம் ஆகியவற்றின் காரணமாக ஓசூரில் ரோஜாக்கள் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. காதலர் தினத்திற்கு இன்னும் 15 நாட்கள் உள்ள நிலையில் ரோஜா மலர்கள் ஏற்றுமதிக்கான பணிகளை விவசாயிகள் தொடங்கி உள்ளார்கள்.

ஒரு கோடி ரோஜாக்கள்

ஓசூர் அருகே உள்ள பாகலூர், பேரிகை, தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம், குந்துமாரனப்பள்ளி, தளி, மதகொண்டப்பள்ளி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் விவசாயிகள் ரோஜா மலர்கள் சாகுபடி செய்கிறார்கள்.

ஆண்டுதோறும் இங்கிருந்து வெளிநாடுகளான ஜப்பான், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, துபாய், சீனா, தாய்லாந்து மற்றும் வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது வழக்கம். இந்த ஆண்டும் காதலர் தினத்தை முன்னிட்டு வெளிநாடுகளுக்கு ஒரு கோடி ரோஜாக்கள் ஏற்றுமதி செய்திட விவசாயிகள் முடிவு செய்து, அதற்கான பணியில் இறங்கி உள்ளனர்.

<u>விமானத்தில் பறக்கின்றன</u>

இந்த மலர்கள் அனைத்தும் அடுத்த வார தொடக்கத்தில் பறித்து, பெட்டிகளில் பத்திரமாக கட்டப்படுகின்றன. இதன் பிறகு ஓசூரில் இருந்து பெங்களூருக்கு கொண்டு செல்லப்படும் ரோஜாக்கள், அங்கிருந்து விமானத்தில் வெளிநாடுகளுக்கு பறக்கின்றன. இந்த ரோஜா சாகுபடி குறித்து, குடிசெட்லுவை சேர்ந்த விவசாயி சிவா கூறியதாவது:–

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 14–ந் தேதி கொண்டாடப்படும் காதலர் தினத்திற்கு ஓசூர் பகுதியில் இருந்து ஒரு கோடி ரோஜாக்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். அதே போல இந்த ஆண்டும் ஏற்றுமதி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. உள்ளூர் மார்க்கெட்டில் ரோஜாக்களின் விலை ரூ.2 முதல் ரூ.5 ஆக உள்ளது. வெளிநாடுகளில் இந்த பூக்கள் ரூ.10 முதல் ரூ.20 வரையில் விற்பனை செய்யப்படுகின்றன. காதலர் தினத்தன்று ரோஜா பூக்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். nஇவ்வாறு அவர் கூறினார்.

**நெற்பயிரில் அழுகல் நோயை கட்டுப்படுத்துவது எப்படி? அதிகாரி விளக்கம்**

**அரியலூர்,**

நெற்பயிரில் அழுகல் அல்லது கரிபுட்டை நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து அதிகாரி விளக்கம் அளித் துள்ளார்.

<u>அழுகல் நோய்</u>

அரியலூர் மாவட்டத்தில் 17ஆயிரம் ஹெக்டர் அளவில் நெற்பயிர் சாகுபடி செய்யப் பட்டு வருகிறது. தற்சமயம் நெற்பயிரில் அழுகல் நோய் தாக் குதல் திருமானூர் வட்டாரத் தில் காணப் படுகிறது. இதனைக் கட்டுப்படுத்துவது குறித்து சோழன்மாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் கருப்பசாரி தெரிவித்துள்ள ஆலோசனை வருமாறு

இது ஒரு வகை பூஞ்சாணத்தால் உண்டாகிறது. இப்பூஞ்சாணால் தாக்கப்பட்ட செடியில் உள்ள கதிர் மணிகள் முதலில் பச்சை கலந்த பழுப்பு நிற நுண் துகள் பந்து போன்று மாறி, பின்பு சமமாகவும், மென்மையாகவும் உருமாறி மஞ்சள் நிற பூசண வித்துக்க ளால் நெல் மணியை சுற்றி இருக்கும்.

இந்தநோய் தாக்குதலால் நெற்பயிரில் மகசூல் குறை வதோடு மட்டுமின்றி தானியங் களின் தரமும் குறைந்து விடு கிறது. மேலும் நோய் தாக்கிய வயலிலிருந்து பெறப்பட்ட விதைகளின் முளைப்புத் திறன் குறைந்து காணப்படும். இந்த நோய் கிருமிகள், காற்று, மண் மற்றும் விதைகள் மூலம் பரவக்கூடிய தன்மை யுடையது. இந்நோயின் தாக்குதல் கோ–43 நெல் ரகத்தில் அதிகமாக காணப் படுகிறது.

<u>கட்டுப்படுத்தும் முறைகள்</u>

பருவத்தே பயிர் செய்தல், தரமான விதைகளை தேர்ந் தெடுத்து விதைக்க வேண்டும். அறுவடையின் போது நோய் பூஞ்சாணம் தாக்கிய பயிர்க ளில் உள்ள வைக்கோல் மற்றும் கழிவுகளை அழித்து விட வேண்டும்.

கார்பென்டாசிம் 4 கிராம் 1 கிலோ விதைக்கு அல்லது சூடோமோனாஸ் 1 கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைத்தல் வேண்டும். அதிகமாக தழைச்சத்து இடுவதை தவிர்த்து பிரித்து இட வேண்டும்.

புரப்பிகோனசோல் 200 மி.லிஏக்கர் (ஒரு மி.லி ஒரு லிட்டர் தண்ணீர்) அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 500 கிராம்ஏக்கர் (2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில்) 200 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் ஒட்டும் திரவம் கலந்து இரு முறை 10 சதம் பூத்திருக்கும் தருணத்திலும் மற்றும் 75 சதம் பூத்திருக்கும் தருணத்திலும் தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நறுமணப் பொருட்களின் ஏற்றுமதி 31% உயர்வு



இந்தியாவின் நறுமணப் பொருட்களின் ஏற்றுமதி ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் 31 சதவீதம் அதிகரித்திருக்கிறது. ஏற்றுமதி 3.78 லட்சம் டன்னாகவும் இதன் மதிப்பு ஒரு பில்லியன் டாலருக்கும் மேலாக இருந்தது.

இந்த ஏற்றுமதியில் மிளகாய் மற்றும் சீரகத்தின் பங்கு அதிகம் என்றும், இந்தியாவின் நறுமண பொருட்களுக்கு அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டு சந்தையில் நல்ல தேவை இருப்பதாகவும் நறுமண பொருட்கள் வாரிய தலைவர் கே.சி. பாபு தெரிவித்தார்.கடந்த வருட இதே காலகட்டத்தில் (ஏப்ரல் செப்டம்பர் 2012) நறுமண பொருட்களின் ஏற்றுமதி மதிப்பு 747.49 மில்லியன் டாலாராக இருந்தது. மிளகாய் ஏற்றுமதி 6 சதவீகிதமும், சீரக ஏற்றுமதி 93 சதவீதமும் அதிகரித்திருக்கிறது. மேலும், சோம்பு, ஏலக்காய், மஞ்சள் மற்றும் மிளகு ஆகிய நறுமண பொருட்களும் ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகித்தன.கடந்த வருட இதே காலகட்டத்தில் ஏற்றுமதி 3.14 லட்சம் டன்னாக இருந்தது. இப்போது உயர்ந்து 3.78 லட்சம் டன்னாக அதிகரித்திருக்கிறது.இந்திய நறுமண பொருட்கள் அமெரிக்காவுக்கு அதிமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதை தவிர மலேசியா, யூ.ஏ.இ., சீனா, ஜெர்மனி, சிங்கப்பூர் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதிக்கால நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கை தாண்டி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

## நாகை: விளைபொருள் சந்தைப்படுத்த ‘உழவர் குழுமம்’



கன்னியாகுமரி மாவட்டத்தில், இயற்கை விளை பொருட்களை சந்தைப்படுத்த வசதியாக, ‘நமது நெல்லை காப்போம். இயற்கை வேளாண்மை உழவர்கள் குழுமம்’ என்ற அமைப்பு தொடங்கப் பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல், வாழை அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில், 60 நாளில் விளைச் சலைத் தருகின்ற, அறுபதாம் குறுவை தொடங்கி, ஏராளமான பாரம்பரிய நெல் ரகங்கள் குமரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

சாகுபடி பரப்பு சரிவு

விளை பொருட்களுக்கு கட்டுப்படியான விலையின்மை, பருவ நிலை மாற்றம், உரங்கள் விலையேற்றம் உள்ளிட்ட காரணங்களால், தமிழகம் முழுவதும் நெல் சாகுபடி பரப்பு சரிந்து வருகிறது. அதே நேரம், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளையும் நெல்லில் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால், அரசு கொள்முதல் நிலையங்களில் கொள் முதல் செய்வதும் இல்லை.இந்த சூழ்நிலையில் இயற்கை முறையில் நெல் சாகுபடி செய்தவர்கள் எங்கே சந்தைபடுத்துவது? என்று தெரியாமல் குழப்பம் அடைந்து, இடைத்தரகர்களிடம் நெல்லை விற்று வந்தனர்.

இந்த நடைமுறைச் சிக்கலைத் தவிர்க்கும் வகையில், குமரி மாவட்ட இயற்கை விவசாயிகளுக்கு ஒரு ஆரோக்கியமான பாதையை காட்டியிருக்கிறது. குமரி மாவட்டத்தில், ‘நமது நெல்லை காப்போம். இயற்கை வேளாண்மை உழவர்கள்

குழுமம்' என்ற அமைப்பு தொடங்கியுள்ளனர். இந்த அமைப்பு தமிழகம் முழுவதும் சுடர் விட இருக்கிறது.

**இடைத்தரகர்கள் இம்சை**

இதுகுறித்து, 'கிரியேட்' அமைப்பு மேலாண்மை இயக்குநர் பொன்னம்பலம் கூறியதாவது:

'நமது நெல்லை காப்போம்' என்ற அமைப்பு தமிழகம், கர்நாடகா, கேரளம், ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் செயல்பட்டு வருகிறது. நம்மாழ்வார் தான் இந்த பணியை தொடக்கி வைத்தார். தொடர்ந்து அவர் இயற்கை வழி வேளாண் குறித்த பரப்புரையில் ஈடுபட்டதன் காரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமான பேர் இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதே நேரத்தில் அவர்களுக்கு சந்தைப்படுத்துவதற்கான விஷயங்கள் தெரியவில்லை. அதன் காரணமாக இடைத்தர கர்கள் புகுந்தனர். இயற்கை விவசாயத்துக்கு ஒருவர் மாறினால், தொடக்கத்தில் கூடுதல் மகசூல் கிடைக்காது. இயற்கை விவசாயத்துக்கு மண் பழக்கப்படவே 3 ஆண்டுகள் பிடிக்கும். அந்த சூழலிலும் மண்ணை மலடாக்க கூடாது என்ற நோக்கத்தில் இயற்கை பக்கம் திரும்பியிருக்கிறார்கள். அதே நேரத்தில் அவர்களுக்கு உரிய விலை கிடைக்காத ஆதங்கத்தில்தான் இந்த அமைப்பை தொடங்கியிருக்கி றோம் என்றார் அவர்.

**சிண்டிகேட் பாதிப்பு**

இந்த வடிவமைப்பு பணிக்காக, தட்டிமேடு பகுதியில் இருந்து வந்திருந்த, 'கிரியேட்' அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் கூறியதாவது:

இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிகளின் நெல் ரகங்களுக்கு அரசு கொள்முதல் மையங்களில் உரிய விலை கிடைப்பதில்லை. வெளியே விவசாயிகளின் நெல்லை சில முதலாளிகள் சிண்டிகேட் அமைத்து லாபம் பார்த்து விடுகின்றனர்.

இதை தவிர்க்க, விவசாயிகளை யும், நுகர்வோரையும் ஒருங்கிணை ப்பு செய்வதே எங்கள் நோக்கம்.இந்த அமைப்பில் இயற்கை வழி வேளாண் விளைபொருள்களை சந்தைப்படுத்தும் இயற்கை அங்காடிகளையும், இயற்கை விவசாயிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்திருக்கிறோம். குமரி மாவட்டத்தில் அது சாத்தியமாகி விட்டது.

இதன் மூலம் இடைத்தரகர் இம்சையில் இருந்து விவசாயிகள் விடுபட்டிருக்கிறார்கள். சிண்டி கேட்டுக்கும் இனி இடம் இல்லை என்றார் அவர்.

**புதிய மாற்றம்**

இயற்கை விளை பொருட்களை சந்தைபடுத்தும் நாகர்கோவில் கௌதமன் கூறியதாவது:

இயற்கையில் விளைந்த நெல் தொடங்கி, காய்கறிகள் வரை அனைத்தையும் நேரடியாக கொள்முதல் செய்யத் தயாராக இருக்கிறேன். இயற்கை விளை பொருட்களுக்கு நல்ல விலையும் கொடுத்து வருகிறேன். ஆனாலும், இடைத்தரகர்களே நேற்று வரை என்னோடு தொடர்பில் இருந்தார்கள். இப்போது தான் முதல் முறையாக விவசாயிகளையும், இந்த கூட்டத்தின் மூலம் பார்த்தேன்”என்றார்.